பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20 சென்னை: புரட்டாசி 23 (9—10—72) திங்கள் வெளியூர்: புரட்டாசி 24 (10—10—72) செவ்வாய் இதழ்: 96

பொருளாதாரத்தில் தேக்கநிலை--விலைவாசிகள் மேலும் உயரக்கூடும்

★

புதுடில்லி, அக். 9—

"நாட்டுப் பொருளாதாரத்தின் தேசிய வருமானத்தில், தேக்க நிலை உருவாகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

"நடப்பு நிதியாண்டில் மேலும் விலைவாசிகள் உயரக்கூடும்"

என்று தேசியப் பொருளாதார ஆய்வுக் குழு கூறியிருக்கிறது.

அரிசன மக்கள் உயிருக்கு ஆபத்து

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியவில்லை

உயிர்--மானத்துக்கு அஞ்சி 150 குடும்பங்கள் தவிப்பு

இந்திரா கட்சி ஆளும் மாநிலத்தில் சாதிவெறியர் அக்கிரமம்--சட்டம் ஒழுங்கு படும் பாடு

பண்டா (உ.பி) அக். 9—

உத்தரப் பிரதேசத்திலுள்ள மஹோகர் பூர்வா' என்னும் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள்--குறிப்பாகப் பெண்கள் தங்கள் உயிருக்கும் மானத்துக்கும் பயந்து வெளியில் வரவே முடியாத நிலையில் இருந்துவரும் பயங்கர நிலை குறித்துத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இது குறித்த அக்கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்கள் குழு ஒன்று மாவட்ட மாஜிஸ்திரேட்டைச் சந்தித்து சாதி இந்துக்களின் கொடுமைகளிலிருந்து தங்களுக்குப் பாதுகாப்புத் தருமாறு கேட்டுக்கொண்டிருக்கிறது.

"எங்களுடைய புதல்விகள்--பேத்திகளின் மானம் இங்கு பறிபோய்க்கொண்டிருக்கிறது! எங்கள் கணவர்களாலோ--புதல்வர்களாலோ அவர்களைக் காப்பாற்ற முடியாத நிலை இருந்து வருகிறது, அரசினரும் வேடிக்கை பார்ப்பவர்களாகவே இருக்கின்றனர்; இனி மேல் நாங்கள் எங்குதான் போவது?" என்று அரிசன மூதாட்டி ஒருவர் நடுங்கிக்கொண்டே செய்தியாளர் ஒருவரிடம் கூறினார்.

இந்தக் கிராமத்தில் சுமார் 150 தாழ்த்தப்பட்ட வகுப்புக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இப்பகுதியில், நிலைமையை அறியச் சென்ற செய்தியாளரிடம் பல திடுக்கிடும் தகவல்களும் விவரிக்கப்பட்டன.

பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருந்தும், ஒரு நாள் ஒரு போலீசுக்காரர் வந்து விசாரித்ததைத் தவிர இதுவரையில் வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரின் இளம் மனைவி ஒரு நாள் தமது கணவருக்கு உணவு எடுத்துச் செல்லும்போது வழிமறித்துத் தூக்கிச் செல்லப்பட்டார்; உடனே அவர் கூக்குரலிட்டார்; அப்பெண்மணியின் கணவர் ஓடி வந்து இடைமறித்தபோது, அவரது குரல்வளையில் துப்பாக்கி முனையை வைத்து அச்சுறுத்தியிருக்கின்றனர்.

திருமணமான இரு இளம் பெண்களை--அவர்களின் மாமியார் வீடுகளில் சேர்த்துக்கொள்ள மறுத்திருக்கின்றனர்; இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சிகளே இதற்குக் காரணமாகும் என்று கூறப்படுகிறது.

அரிசனங்கள் இந்த அநியாயத்தை அதிகாரிகளிடம் புகார் செய்வது, சாதி இந்துக்களுக்கு மேலும் ஆத்திரத்தை மூட்டியிருக்கிறதாம்!

இங்கு பெரும் நிலக்கிழார்களாக இருந்துவருபவர்கள், 'தாகூர்' என்னும் சாதி இந்து சமூகத்தினராவர்!

இவர்கள் பஞ்சாயத்துக் கூட்டம் கூட்டி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் வேலைக்கு வராவிட்டால் அவருக்கு ரூ 25 அபராதம் விதிப்பது என்று முடிவு செய்திருக்கின்றனராம்.

தங்கள் பண்ணைகளில் பணியாற்றும் அரிசனங்களுக்கு இவர்கள் நாள் ஒன்றுக்கு 1.25 கிலோ கிராம் தானியம் மட்டுமே கூலியாகத் தந்திருக்கின்றனராம்; இவர்கள் ஒரு நாள் வேலைக்கு வராமற் போனால் விதிக்கப்படும் அபராதம் ஒரு மாத ஊதியத்துக்குச் சமமானதாகும்.

வேலைக்கு வராமல் அதிகாரிகளிடம் புகார் செய்யப் போகாமல் இருக்கவே தாகூர்கள் இந்தக் கடுந் தண்டனையை விதித்துள்ளனர்.

சுமார் 6 மாதங்களுக்கு முன் இங்கு கிராம முதலவருக்கான தேர்தலில், தாகூர் சாதியினருக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் போட்டியிட்டிருக்கிறார்; அவருக்கு ஆதரவாக அரிசனங்கள் வாக்களித்ததுதான் சாதி இந்துக்களின் கோபத்துக்குக் காரணமாகும் என்று கூறப்படுகிறது; அதிலிருந்து ஒவ்வொரு நாளும் அவர்களின கொடுமைகள் பொறுக்க முடியாததாக வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

ஒரு மாதத்துக்குமுன், தமது உறவினர் ஒருவர் கொலை செய்யப்பட்டதாக அரிசனப் பெண்மணி ஒருவர் தெரிவித்தார்; ஆனால் அது போலீசுக்குத் தெரிவிக்கப்படவில்லை; இப்படிப்பட்ட கொலைகள் மேலும் நடைபெறும் என்ற அச்சத்தினாலேயே இந்நிகழ்ச்சியைப் போலீசுக்குத் தெரிவிக்கவில்லையாம்.

கொலை செய்யப்பட்டவரின் பெயரைக்கூட வெளியிட கிராம மக்கள் அஞ்சுகின்றனராம்.

கற்பழிப்பு நிகழ்ச்சிகள் மீது நடவடிக்கை எடுக்க மிகவும் சிரமமாக இருந்ததாக மாவட்ட மாஜிஸ்திரேட் தெரிவித்தார். பாதிக்கப்பட்டவர்கள், சமூகத்தில் தங்களது மானம் போய் விடுமே என்று கருதிப் புகார் செய்ய மறுத்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

ஆயினும் தமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட மத்துக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழகத்தில் வறட்சித் துயர் தணிப்புப் பணி

டில்லியிலிருந்து இதுவரை உதவி எதுவும் வரவில்லை

நிலைமையை விளக்கிக் கடிதம் எழுதியிருப்பதாக முதல்வர் தகவல்

மதுரை, அக். 9—

"மத்திய அரசிடமிருந்து தமிழக வறட்சிப் பணிக்காக ஆறு கோடி ரூபாய் கேட்டிருந்தீர்களே--ஏதாவது கிடைத்திருக்கிறதா?"

என்று மதுரையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் செய்தியாளர்கள் வினவினர்; அதற்கு முதலமைச்சர் கூறியதாவது:—

"பணம் கிடைக்கவில்லை; மத்திய அரசிலிருந்து ஒரு குழுவை அனுப்பி--தமிழக வறட்சிப் பகுதிகளைப் பார்த்துப் பரிசீலித்த பிறகு உரிய நடவடிக்கை எடுப்பதாக, டெல்லியில் தம்மைச் சந்தித்த வருவாய்த் துறை அமைச்சர் ம. உ. சண்முகத்திடமும்--உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமியிடமும் தலைமையமைச்சர் தெரிவித்திருக்கிறார்; கலெக்டர்கள் மாநாட்டில்எடுத்த முடிவுகளையொட்டி நானும் நிலைமைகளை விளக்கிக் கடிதம் எழுதியிருக்கிறேன்; மத்தியிலிருந்து வரும் குழு பரிசீலனை நடத்துவதற்கு முன்பே முதற்கட்டமாக ஒரு தொகையை மத்திய அரசு வழங்கும் என்று நம்புகிறேன்."

கேள்வி:—"தமிழக அரசு இப்போது எவ்வளவு செலவு செய்திருக்கிறது?"

பதில்:— "மத்திய அரசின் தொகையை எதிர்பார்த்துத் தமிழக அரசு ஒரு கோடி ரூபாய் செலவிட முன்வந்திருக்கிறது."

தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தபின்..

கேள்வி:—"'படிக்கச் சொன்னார் காமராசர்--குடிக்கச் சொன்னார் கருணாநிதி' என்று கூறுகிறார்களே--இதுபற்றித் தங்கள் கருத்தென்ன?"

பதில்:—"நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 25 அரசுக் கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன; 1966-ம் ஆண்டு வரையில் இருந்த கல்லூரிகள் 27 மட்டுமேதான்; இப்போது மொத்தம் 52 கல்லூரிகள் இருக்கின்றன; கல்லூரிகளில் படித்த மாணவர் தொகை முன்பு 80,000 மட்டுமே தான்: இப்போது 1,83,000 ஆகும்."

அனைத்திந்திய அளவில் பேச முன்வராததேன்?

கேள்வி:—"கள்ளுக்கடைகளால் ஏழைகள் வாழ்வு சீரழிந்து விட்டதாகக் காமராசர் கூறியிருக்கிறாரே--உங்கள் கருத்தென்ன?"

பதில்:—"மது அருந்துதலைக் கொள்கையளவில் கூடாது என்பதில் நானும் ஒத்த கருத்துடையவன்தான்; ஆனால் அகில இந்தியத் தலைவர்கள் அகில இந்திய ரீதியில் பேசவேண்டுமேயல்லாமல், தி. மு. க. கழகத்தின்மீது குற்றஞ் சாட்டுவதற்காகப் பேசுவது சரியல்ல."

சட்டத் துறை ஆராய்கிறது

கேள்வி:—"பெரிய நகரங்களில்,

(4-ம் பக்கம் பார்க்க)

மாநில சுயாட்சி--மற்ற மாநிலங்களின் நிலை

★

'நமது முயற்சி வெற்றி பெறுகையில் ஆதரவு அளிப்பர்--வரவேற்பர்'

'காமராசரும் இதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்'

செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

மதுரை, அக். 9—

"சென்னையில் நடந்த அவைத் தலைவர்கள் [illegible]நாட்டில், 'மாநிலங்களுக்குப் பரவலான அதிகாரங்கள் தேவை' எனப் பேசப்பட்டதே--அது, மாநில சுயாட்சிக்கு ஆதரவு பெருகுகிறது' என்பதற்கு அறிகுறி என்று கருதுகிறீர்களா?"

என்று இங்கு செய்தியாளர்கள், முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வினவினர்; அதற்கு முதலமைச்சர் கூறியதாவது:—

"பல மாநிலங்களில் அதிகாரத்தில் உள்ளவர்கள் உள்ளத்தில் அந்த உணர்வு இருந்துகொண்டுதான் இருக்கிறது! அதைத் தமிழ்நாட்டில் தி. மு. கழகம் வெளிப்படையாகச் சொல்கிறது! [illegible]து முயற்சியில் நாம் வெற்றி பெறும்போது அதை [illegible]லா மாநிலங்களும் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை."

மேலும் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அவற்றிற்கு முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"மாநில சுயாட்சிக்குப் போராடும் துணிவு கருணாநிதிக்குக் கிடையாது--என்று காமராசர் கூறியிருக்கிறாரே?"

பதில்:—"எனக்கு இருக்கிறதோ இல்லையோ--மாநில சுயாட்சி தேவை என்பதில் காமராசர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்."

கேள்வி:—"மாநில சுயாட்சி பற்றி இருவரும் சந்தித்துப் பேசுவீர்களா?"

பதில்:—"ஏற்கனவே ஒருமுறை பேசி விட்டோம்; சுயாட்சி பற்றிப் பேச விரும்பினால் பேசலாம்."

கல்வித் துறையிலா கவனக் குறைவு?

புள்ளிவிவரங்களுடன் முதலமைச்சர் கலைஞர் பதில்

சென்னை, அக். 9—

"கழக அரசு கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கிறது! இந்தக் குற்றச்சாட்டு சரிதானா என்ற கேள்விக்குறி எழுகின்ற நேரத்தில் — அதற்குப் புள்ளிவிவரங்களே பதில் சொல்லுகின்றன.

1967-ல், தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 80,000 ஆக இருந்தது; கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் இந்த எண்ணிக்கை 1,83,000 ஆக உயர்ந்திருக்கிறது!

1967-ல் தமிழ்நாட்டில் இருந்த அரசினர் கல்லூரிகளின் எண்ணிக்கை 27 மட்டுமேதான்; இன்றோ - 52 ஆக உயர்ந்திருக்கிறது!

இன்று கல்லூரிக் கல்விக்காக தமிழக அரசு ரூ. 10 கோடி செலவிட்டு வருகிறது; இதில் ஆசிரியர்களுக்காக மட்டும் ஊதியம் போன்றவற்றிற்காக ரூ. 1,10 கோடி அளவில் செலவழித்திருக்கிறது என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு அரசினர் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் முதல் மாநில மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

மாநிலக் கல்லூரியின் தலைமைப் பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் அனைவரையும் வரவேற்றார்.

மாநிலக் கழகத் தலைவர் என். முத்துக்குமாரசாமி தலைமை தாங்கினார்.

மாநிலக் கழகப் பொதுச்செயலாளர் வி. எஸ். சேஷாத்திரி அறிக்கை வாசித்தார்.

மாநிலக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் புலவர் மா. நன்னன் முதலமைச்சர் கலைஞருக்கும் -- அரசினர் கல்லூரி முதல்வர் ஆர். ஐயாசாமி கல்வியமைச்சர் நாவலருக்கும் வாழ்த்துரைகள் வாசித்தளித்தனர்.

முதலமைச்சரின் இலவசக் கண் சிகிச்சை முகாம் அமைப்பு நிதிக்கு விழாக் குழுவினரால் ரூ. 1,000 வழங்கப்பட்டது.

இராசிபுரம் அரசினர் கலைக் கல்லூரி முதல்வர் ஆர். நரசிங்கன் தீர்மானங்களைப் படித்தார்.

விழாவில், மாநாட்டின் சிறப்பு மலரை கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டார்; முதலமைச்சர் கலைஞர் அதனைப் பெற்றுக் கொண்டார்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

வரவேற்புக் குழு இணைச் செயலாளர் பொன். சுப்பையா நன்றி கூறினார்.

முதலமைச்சர் கலைஞர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த ஆட்சி, ஆசிரியர்கள்— மாணவர்கள் முன்னேற்றத்திற்காகவும், கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகவும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் ஏராளம்.

முன்பு, ஆசிரியர் -- மாணவர்களிடையே இருந்த தொடர்பு வேறு; வில் வித்தையைக் கற்றுக் கொடுத்ததற்காகக் கட்டை விரலைக் கேட்ட துரோணாச்சாரியர் அன்று இருந்தார்; இன்றுள்ள மாணவர்கள், 'கல்வி கற்றுக் கொடுத்ததாலேயே -- உன்னுடைய கட்டை விரலைக் கொடு' என்று கேட்காமல் இருந்தால் போதும் -- ஆசிரியர்கள் தப்பித்தார்கள்! காலம் தலைகீழாக உள்ள சமுதாயத்தில் வாழ்ந்து வருகிறோம்!

இன்றையத்தினம் பேராசிரியர்களாகிய நீங்கள் பொன்னே போல் போற்றக்கூடிய அளவில் கடமையை உணர்ந்து பணியாற்றிட வேண்டும்; உங்களுக்குக் குறைகள் எதுவும் இல்லை என்று சொல்லவில்லை; அதே சமயம் அரசாங்கத்தின் நிதி நிலைமையும் நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

நிச்சயம் பரிசீலிப்போம் -- கோரிக்கை நிறைவேறும்

பல கோரிக்கைகளை இங்கு வைத்திருக்கிறீர்கள்; நிதி நிலைக்கு ஏற்றவாறு உங்களது கோரிக்கைகளை நிச்சயம் பரிசீலிப்போம்.

ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு பல்வேறு துறைகளில் உள்ளவர்கள் -- ரூ 200 என்றோ ரூ 300 என்றோ ஊதியம் பெறுபவர்கள் தங்களுடைய ஊதியத்தை மேலும் உயர்த்த வேண்டும் என்று கேட்கிறார்கள்; அதே நேரத்தில், 10 ரூபாய்கூட கிடைக்காமல் இடைச்சக்கணக்கான மக்கள் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்த்திட வேண்டும்; அதை நீங்கள் மறந்துவிட்டால், 'சமுதாயத்தில் மிகப் பலராக உள்ள நம்மைப் பற்றிச் சிந்தித்தும் பார்க்காமல், தங்களை மட்டும்தான் பார்த்துக் கொள்கிறார்கள்' என்ற குற்றச்சாட்டுக்கு நீங்கள் ஆளாகிவிடக் கூடாது.

உங்களுடைய கோரிக்கைகளை உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் வேண்டிய முயற்சியை எடுக்கும்.

ஆசிரியர் பெருமக்களாகிய நீங்கள், 'தமிழ்ச் சமுதாயத்தை— இந்த நாட்டை—எதிர்காலக் குடிமக்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறோம்' என்ற உணர்வோடு பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

இந்தி ஆசிரியர்கட்கு மாற்று வேலை

தமிழக அரசு அறிவிப்பு

திருச்சி, அக். 9—

தமிழ்நாட்டில் 1968-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 'இருமொழி பாடத் திட்ட'த்தின் விளைவாக வேலை நீக்கம் செய்யப்பட்ட இந்திப் பண்டிதர்கள், மற்றும் பிற மொழிப் பண்டிதர்கள் தத்தம் மாவட்டங்களில் உள்ள வேலைவாய்ப்பு நிலையங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம்; இதன்மூலம் அவர்களது பொதுவான கல்வித் தகுதிக்கேற்ற மற்ற வேலைகளை அரசின் எல்லாத் துறைகளிலும் செகண்டரி பள்ளிகளிலும் தேடித் தருவதற்கு இயலக்கூடும்.

இத்தகவலை, தமிழக அரசின் உத்தரவு ஒன்று தெரிவிக்கிறது; அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"மற்ற சிறப்பான கல்வித் தகுதிகளைப் பெற்றிராதவர்களாகவும் -- பகுதி நேர ஆசிரியர்களாகவும் பணியாற்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட இந்தி மற்றும் பிறமொழிப் பண்டிதர்களுக்கே இந்த உத்தரவு பொருந்தும்.

1968-ஆம் ஆண்டுவரையிலான இவர்களது பணிகளைக் கணக்கிட்டு -- அதற்கேற்ற விதத்தில் புதிய வேலைகளுக்கான வயது வரம்பில் இவர்களுக்கு விலக்கு அளிக்கப்படும்.

இந்த விதத்தில் இவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் கிடைத்தால், அது பற்றிய தகவல்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே தெரிவிக்கப்படும்."

தமிழ்நாட்டின் கல்வித் தரம் உயர்ந்திருப்பது அவசியம்

உரிய ஆலோசனைகள் கூற ஆசிரியர்கள் முன்வர வேண்டும்

கல்வியமைச்சர் நாவலர் வலியுறுத்தல்

சென்னை அக் 9—

"மாநிலக் கல்லூரியை மாநிலம் முழுவதற்குமான முதுகலைப் பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி நிலையமாக மாற்றுவது பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது, அதற்கான இட வசதிகள் அனைத்தும் இங்கு இருப்பதால் இவ்வாறு மாற்றியமைப்பது உகந்ததாக இருக்கும்.

"முதல் வகுப்பிலிருந்து தொடங்கி கல்வி முறையை மாற்றியமைக்கத் தமிழக அரசு விரும்புகிறது; இந்தியாவில் மற்ற எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும், தமிழ்நாட்டின் கல்வித் தரம் ஒருபடி உயர்ந்தே இருக்கவேண்டுமென்று அரசு அவாக் கொண்டிருக்கிறது; அதற்குக் கல்வித்துறை நிபுணர்கள் -- ஆசிரியர்கள் -- பேராசிரியர்கள் சிறந்த முறையில் ஆலோசனை கூறுவது அவசியமாகும்.

"அரசினர் கலைக் கல்லூரிகள், ஏனைய கல்லூரிகளுக்கு ஒரு உதாரணமாகத் திகழவேண்டும்; அதற்கு இதன் ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாநாட்டின் சிறப்பு மலரை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:—

பிரச்சினைகளை நீக்கவே அரசு பாடுபடுகிறது

"இதுபோன்ற மாநாடுகள் -- கருத்தரங்கங்கள் மூலம் கல்வியின் தரம் உயர வகை ஏற்படும்.

இங்கே எண்ணற்ற கோரிக்கைகளை வைத்தீர்கள்; ஆங்காங்கே பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன; அவைகளை நீக்கத்தான் இந்த அரசு பாடுபட்டு வருகிறது.

வேண்டுவன என்ன என்ன என்பதை நீங்கள் தெரிவிக்கிறீர்கள்; அதில் முடிவன என்ன எவன என்பதைக் கல்வி இயக்குநர் கூறுவார் அதைப் பரிசீலித்து -- அவற்றில் இயல்வன என்ன என்ன என்பதை முதலமைச்சர் கூறுவார்.

'ஆண்கள் கல்லூரியில் ஆண்களையும் -- பெண்கள் கல்லூரியில் பெண்களையும்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்' என்று கோரியிருக்கிறீர்கள்; அதைப் பெண்ணுலகம் ஏற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகமே!

[illegible] னைக்கு மாற்றலாகி வருகின்றவர்கள் 'வேறு எங்கும் மாற்றலாகக் கூடாது' என்று நினைக்கிறார்கள்; இது எப்படி இயலும்? ஆறு வருடங்களுக்குமேல் பணியாற்றிய ஆசிரியர்கள்தான் சென்னையில் இருக்கவேண்டும் என்பதுபோல், ஆசிரியர்கள் -- கல்லூரிப் பேராசிரியர்களெல்லாம் சேர்ந்து ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

'மாநிலக் கல்லூரியை, மாநிலம் முழுவதற்குமான முதுநிலைப்பட்டமேல் படிப்புக்கு (போஸ்ட் கிராசுவேட்) உரியதாக மாற்றலாமா' என்று பரிசீலித்து வருகிறோம்.

கல்வித் துறையின் தரத்தை -- மாற்றத்தை இப்படிப்பட்ட கருத்தரங்குகள் நடத்தி முடிவு செய்வீர்களானால் அது பயனுள்ளதாக இருக்கும்.

பிரச்சினை எதுவானாலும் அதை உங்களுக்குள்ளேயே நீங்கள் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

உங்களுக்குள் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்கப் போலீசு வரவேண்டும் -- கலெக்டர் வரவேண்டும் -- எம்.எல்.ஏ. வரவேண்டும் என்பது போன்ற நிலைமைக்கு இடம் தரக்கூடாது.

எழுதுவது எளிதுதான்-யோசிக்கவேண்டாமா?

'டில்லியிலுள்ள ஜவகர் கல்லூரி போல இங்கே உண்டா?' என்று ஆசிரியர் கடிதத்தில் எழுதுகிறார்கள்.

ரூ. 10 கோடியில் நிறுவப்பட்டுள்ள அந்தக் கல்லூரியில் 103 மாணவர்களுக்கு 96 ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; அந்த வாய்ப்பு -- வசதியெல்லாம் இங்கே இருக்கிறதா என்று அப்படி எழுதுகின்றவர்களுக்கு யோசித்துப் பார்க்க முடியவில்லை.

அறிவில் சிறந்து விளங்குகிறது தமிழகம்

இந்த மண்ணில் தொன்றுதொட்டு நிலவிவரும் அறிவு -- பண்பாடு வளம் நாளுக்கு நாள வளர்ந்துகொண்டுதான் இருக்கிறது!

வெளிநாட்டிலே போய்ப் படிக்கின்ற நம் நாட்டு மாணவர்கள் கூட அங்குள்ள மற்ற நாட்டு மாணவர்களைவிட அறிவில் சிறந்துதான் விளங்குகிறார்கள்.

கல்வித் தரத்தில் எந்த மாநிலத்திற்கும் இந்த மாநிலம் குறைந்ததல்ல!"

தன்னம்பிக்கையை ஆசிரியர்கள் இழக்கக் கூடாது

மனநிறைவுடன் பணியாற்றினாலன்றி பிரச்சினைகள் தீர வழியில்லை

பேராசிரியர் க. அன்பழகன் கருத்துரை

இம்மாநாட்டில் சிறப்புரையாற்றுகையில் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கூறியதாவது:—

"ஆசிரியர்கள் சார்பில் மிக அதிகமான கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டன; நாட்டிற்கு வழிகாட்டவேண்டிய ஆசிரியர்கள் சமுதாயம் தங்களுக்கான கோரிக்கைகளை மிக அதிகமாக வலியுறுத்தக்கூடாது; ஆசிரியர்கள் தங்களையே காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலை வருமானால், அவர்களால் மாணவர்களையும் காப்பாற்ற முடியாத நிலை உருவாகிவிடும்.

மாணவர்கள் -- தொழிலாளர்கள் மாநாடுகட்கும், கல்லூரிப் பேராசிரியர்கள் மாநாட்டிற்கும் வேறுபாடு இருக்க வேண்டும்.

கல்வி வளராத காலத்தில் மாணவர்களை உருவாக்குவதில் ஆசிரியர்கட்கு இருந்த உற்சாகமும் ஊக்கமும், கல்வி வளர்ந்துள்ள இன்றைக்கு ஆசிரியர்களிடத்திலே காண முடியவில்லை.

கல்விக்காக முன்பு இருந்த ஆட்சியாளர்கள் வெறும் ரூ. 20 கோடி மட்டுமே செலவிட்ட நிலை மாறி -- இன்றைக்கு இந்த அரசு ரூ. 90 கோடி செலவிட்டு வந்தும் கூட கோரிக்கைகள் பலித்திருக்கின்றன!

நான் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் ரூ. 75 மட்டும்தான் சம்பளம்; அந்தத் தொகை ரூ. 350-ஆக உயர்ந்தும்கூட போதவில்லை என்ற நிலை வந்திருக்கிறது; இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை நீங்களே ஆராய்ந்து பார்த்துக் கொள்வது நல்லது.

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கட்குத் தன்னம்பிக்கை அவசியம்; மாணவர்களிடத்திலும் தன்னம்பிக்கை ஒளியை ஏற்றுவிக்க வேண்டும்; மாணவர்களின் நம்பிக்கைப் பாதையைப் பெறும் வகையில் அவர்கள் விளங்க வேண்டும்.

தன்னம்பிக்கை இல்லாதவர்கள் ஆசிரியர்களாக இருக்க முடியாது; வேறு வேலை கிடைக்காமல் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர்களால், மாணவர்களின் தன்னம்பிக்கையும் கெடத்தான் நேரிடும்.

முதலில், வாழ்வதற்கு நாம் பயிற்சி பெற்றவர்களாகி -- மற்றவர்களையும் அந்தப் பயிற்சிக்குத் தக்கவர்களாக்குகின்ற போதுதான் மனநிறைவு கிட்டும்.

ஆசிரியர்கள் இதையெல்லாம் உணர்ந்து நடப்பார்களானால் பிரச்சினைகட்கே இடமிருக்காது.

இலவசக் கல்வியாலும் மற்றும் பல காரணங்களாலும் ஆசிரியர்கள் -- மாணவர்களிடையே உள்ள உறவு இந்நாளில் தளர்ந்து போயிருக்கிறது.

ஆசிரியருக்கும் — மாணவர்கட்கும் உள்ள உறவு முறை இறுக்கமானதாக அமைய வேண்டும்.

ஒரு சிறந்த ஓவியனுக்கு -- அவனது ஓவியத்திற்குக் கிடைக்கும் பரிசைவிட, அதன்மீது அவனுக்கு உண்டாகின்ற மகிழ்ச்சி இருக்கிறதே அதுதான் பெரிது; அந்தவிதமான உணர்ச்சி ஆசிரியர்கட்கும் இருக்க வேண்டும்."

நாணயமும் நேர்மையும் காமராசருக்கு இருக்குமானால்...

சென்னை, அக். 8—

"மதுரையில் நடைபெற்ற ஊர்வலத்தில், 'காமராசர் படிக்கச் சொன்னார் -- கருணாநிதி குடிக்கச் சொன்னார்' என்று முழங்கினார்களாம்!

காமராசர், அகில இந்திய காங்கிரசுத் தலைவராக இருந்தபொது, மைசூர் மாநில மக்களைக் குடிக்கச் சொன்னது யார்? மகாராஷ்டிர மக்களைக் குடிக்கச் சொன்னது யார்? ஆந்திர மாநில மக்களைக் குடிக்கச் சொன்னது யார்? பாண்டிச்சேரி மாநிலத்தில் மக்களைக் குடிக்கச் சொன்னது யார்?

நமது மாநிலத்தைச் சுற்றியுள்ள அத்தனை மாநிலங்களிலும் மக்களை குடிக்கச் சொன்னது காமராசர் தலைவராக இருந்த காங்கிரசுக் கட்சிதானே!

1969-க்குப் பின்னால், கலைஞர் அவர்கள், மத்திய அரசுக்கு பலமுறை விளக்கி விளக்கி எழுதி அலுத்துப்போய் -- சட்டமன்றத்தில் பலமுறை பேசிப் பேசி -- கடைசியாக மத்திய அரசுக்கு ஓராண்டுக் காலம் தவணை கொடுத்து -- பிறகு மதுவிலக்கை ரத்துச் செய்தார்.

போராட்டங்களுக்காக அலைந்து கொண்டிருக்கின்ற காமராசரும் -- அவரது கட்சியினரும், கள்ளுக்கடைகளின் முன்னால் மறியல் செய்வார்கள் என்று நான்கூட எதிர்பார்த்தேன்!

ஆனால், நமது மாநிலம் முழுவதிலும் பெருவாரியாகக் கள்ளுக்கடைகளை ஏலம் எடுத்தவர்களே காமராசர் கட்சியினர்தான்!

திருச்சியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் -- காங்கிரசுகாரர் -- காமராசரின் தொண்டர் 22 சாராயக் கடைகளை ஏலம் எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறார்!

கள்ளுக் கடைகளுக்கு முன்னால் மறியல் செய்வார்கள் என்று யாரை எதிர்பார்த்தோமோ அவர்கள், கள்ளுக் கடைகளுக்குள்ளே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்!

காமராசருக்கு உண்மையிலேயே அரசியல் நாணயமும் -- நேர்மையும் -- ஆண்மையும் இருந்தால், அவர் கட்சியினரை கள்ளுக் கடைகளுக்கு முன்னால் மறியல் செய்யச் சொல்வாரா? அந்தத் தைரியம் அவருக்கு இருக்கிறதா?

1966-ல் காங்கிரசுக் கட்சி ஆட்சியில் இருந்தபொழுது கல்விக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 40 கோடி மட்டும்தான்; ஆனால் கழக ஆட்சியில் ரூ 95 கோடி செலவிடப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்விக்காகக் காங்கிரசு ஆட்சி இருந்தபொழுது செலவிடப்பட்ட தொகை ரூ. 85 இலட்சம் தான்; கழக ஆட்சியில் ரூ 2.50 கோடி செலவிடப்படுகிறது.

பிற்பட்ட இனத்தவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கக் காங்கிரசு ஆட்சி ரூ. 1 கோடி மட்டுமே செலவிட்டது; கழக ஆட்சியில் ரூ. 6 கோடி செலவிடப்படுகிறது.

இதெல்லாம் தெரிந்திருந்தும், 'கலைஞர் குடிக்கச் சொன்னார்' என்று முழங்கினால் மக்கள் நம்பிவிடுவார்களா?

180 ஆண்டுகளில் வெள்ளையர் ஆட்சியும் -- காங்கிரசு ஆட்சியும் கல்விக்காகச் செலவு செய்யாத தொகையைக் இந்த ஐந்து ஆண்டுகளில் கழக அரசு செலவு செய்துள்ளது.

மூடிக்கிடப்பதாக 'முடிச்சு'ப் போடுவதா?

'எல்லாத் தொழிற்சாலைகளும் மூடிக் கிடக்கின்றன' என்ற ஒரு பெரும் பொய்யைக் காமராசரும் -- மற்றவர்களும் கூறி வருகின்றனர்!

ஆவடியில் -- அம்பத்தூரில் -- திருவொற்றியூரில் -- எண்ணூரில் -- கோவையில் -- மேட்டுப்பாளையத்தில் -- திருப்பூரில் -- சிவகாசியில் -- மதுரையில் -- விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளும் மூடிக்கிடக்கின்றனவா என்ன? ஒருவேளை காமராசர், ஞாயிற்றுக்கிழமையன்று அங்கெல்லாம் சென்று பார்த்தாரோ என்னவோ?

காங்கிரசு ஆட்சியில் விற்பனை வரி ரூ. 60 கோடிக்கு அதிகமாக வில்லை; ஆனால், இப்பொழுது விற்பனை வரி மட்டும் ரூ. 50 கோடி கிடைத்திருக்கிறது.

தொழிலாளர்கள் வேலை செய்யாமல் தொழிற்சாலைகள் மூடிக் கிடந்தால் -- உற்பத்தி ஆகாமலிருந்தால் -- பொருள்கள் விற்பனை ஆகாமலிருந்தால் -- இவ்வளவு விற்பனை வரி கூடுதலாகக் கிடைக்குமா?

எந்த ஆதாரத்துடன் -- எந்தப் புள்ளி விவரங்களுடன் இப்படிப் பேசுகிறார்களோ -- நமக்குப் புரியவில்லை!"

--கல்வியமைச்சர் நாவலர்

(திருவொற்றியூர் கூட்டத்தில்)

வன்முறைக்கு வித்திடுகின்றனர்

விஷமிகளின் முயற்சி-- இந்திரா எச்சரிக்கை

ஐதராபாத், அக். 9—

"கட்சியும் -- அரசும் பின்பற்றும் கொள்கைகள், சில சுயநலச் சக்திகளைப் பாதிக்கின்றன; எனவே, 'பெரும் கூட்டணியை உருவாக்க முயற்சிக்கின்றனர்; இது பற்றிக் கட்சி ஊழியர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

"வன்முறைச் செயல்களைத் தூண்டிவிடுவதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் சங்கடங்களைத் தங்களுடைய நலன்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள விஷமிகள் முயற்சிக்கின்றனர்; அவர்களின் இத்தகைய முயற்சிகளை முன்னெச்சரிக்கையுடனிருந்து முறியடிக்க வேண்டும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, சிறப்பு மலர் ஒன்றுக்கு அளித்துள்ள செய்தியில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மருத்துவமனையின் பெயர் மாற்றம்

சென்னை, அக். 9—

சென்னை- தண்டையார்பேட்டையிலுள்ள தொற்று நோய் மருத்துவமனையின் பெயர், 'தண்டையார்பேட்டை மாநகராட்சி மருத்துவமனை' என்று மாற்றப்பட்டிருக்கிறது.

மீன் வளத்தைப் பெருக்க புரட்சித் திட்டம்

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு தொடங்குகிறது

சென்னை, அக். 9—

தமிழ்நாட்டில் மீன் வளத்தில் புரட்சி ஏற்படுத்துவதற்காகத் திட்டக் குழு உறுப்பினர் நடராசன் தலைமையில் தனிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது; ஆராய்ச்சிக்குப் பின் அக்குழு, அறிக்கை ஒன்று தயாரித்தது; அந்த அறிக்கையை, முதலமைச்சர் சார்பில் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து பெற்றுக் கொண்டார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

"மீன் வளத்தில் தனிப் புரட்சியை ஏற்படுத்துவதற்காக 12 ஆண்டுக் காலத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது; 1972-ல் தொடங்கப்படும் இந்தத் திட்டம் 1984-ல் முடிவடையும்.

இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், தமிழ்நாட்டில் இப்போது கிடைக்கும் மீன்களைப் போல் மூன்று மடங்கு மீன்கள் கிடைக்கும்; மீன்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் அந்நியச் செலாவணியும் கிடைக்கும்.

மீன் வளத்தைப் பெருக்குவதற்காக மீன் பிடிப்பவர்களுக்கு மோட்டார்ப் படகுகள் -- நவீன கருவிகள் ஆகியவை கிடைக்கும்படி செய்ய வேண்டும்; நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்காக அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

பிடிக்கப்பட்ட மீன்களை பதப்படுத்துவதற்காகவும் -- சேமித்து வைப்பதற்காகவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

மீன் பிடிப்பவர்களுக்காகத் தமிழ்நாட்டில் 6 இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது; நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவது பற்றி இங்கு சொல்லிக் கொடுக்கப்படுகிறது; இந்தப் பயிற்சி நிலையங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

நீலகிரி -- கொடைக்கானல் போன்ற இடங்களில் உள்ள மீன் வளர்ப்புப் பண்ணைகளை விரிவுபடுத்த வேண்டும்.

மீன் பிடிப்பவர்களுக்குத் தேவையான வீடு -- குடிதண்ணீர் வசதி -- சாலை வசதி போன்றவைகளைச் செய்து தரவேண்டும்.

மத்திய அரசின் உதவியுடன் சென்னை -- தூத்துக்குடி -- கொளச்சல் -- மண்டபம் ஆகிய நான்கு இடங்களில் மீன் பிடித் துறைமுகங்கள் அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது; இது தவிர, எண்ணூர் -- குலசேகரப்பட்டினம் போன்ற இடங்களிலும் மீன் பிடிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

மீன் வளத்தைப் பெருக்குவதன் மூலம் நல்ல சத்துணவு கிடைக்கிறது: அத்துடன், ஆயிரக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்புப் பெற முடியும்.

இதற்காகத் தீட்டப்படும் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதன் மூலம் முதல் 5 ஆண்டுக் காலத்தில் 35,500 பேர் வேலை பெறமுடியும்; இந்தத் திட்டம் முழுவதும் நிறைவு பெற்றால், மொத்தம் 55,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும்."

மேற்கண்ட தகவல்களைத் தமிழ்நாடு திட்டக் குழுத் துணைத் தலைவர் எம். ஜி. இராசாராம் நிருபர்களிடம் தெரிவித்தார்; தமிழ்நாடு மீன் வளத்துறை இயக்குநர் வெங்கட்ராமனும் அதுபோது உடனிருந்தார்.

வேலைவாய்ப்பை உருவாக்கும் புதிய தொழில்கள்

அரசு உதவியைப் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும்

தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்கள் மாநாட்டில் அதிகாரி வற்புறுத்தல்

கோயமுத்தூர், அக். 9—

தமிழ்நாட்டிலுள்ள தொழிற் பயிற்சிக் கழகங்களின் முதல்வர்கள் மற்றும் வேலைவாய்ப்பு அதிகாரிகளின் 10-வது மாநில மாநாடு கோவையில் நடந்தது.

தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை செயலாளர் எம். எம். இராசேந்திரன் மாநாட்டைதுவக்கி வைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

"படித்த இளைஞர்கள் சுயமாகத் தொழில்நடத்தவும், வேலைவாய்ப்புகள் மேலும் பெருகவும் திட்டங்கள் வகுக்கவேண்டும்.

பயிற்சி பெற்ற தொழில்வினைஞர் சொந்தமாகத் தொழில் நடத்த அரசாங்கம் நிதியுதவி அனுமதித்து வருகிறது; ஆனால், இந்த ஏற்பாடு முழுவதுமாக வெற்றியடையவில்லை; எதிர்பார்த்த பலன்கள் இந்த ஏற்பாட்டால் ஏன் ஏற்படவில்லை என்பதைத் தொழில் பயிற்சிக் கழகங்களின் முதல்வர்கள் விவாதிக்கவேண்டும்.

பயிற்சிபெற்ற தொழில் வினைஞர் சொந்தமாகத் தொழில் நடத்த அரசாங்கம் முதலில் அனுமதித்த உதவித் தொகையின் அளவு போதுமானதாக இராமல் இருக்கலாம் என்பதால், உதவித் தொகையின் அளவை ரூ 5,000 ஆக அரசாங்கம் இப்போது அதிகப்படுத்தியுள்ளது; திருத்தியமைக்கப்பட்டுள்ள இந்த ஏற்பாடு வெற்றிகரமாகச் செயல்படாவிட்டால், வேலை வாய்ப்புகளுக்கு உதவக்கூடிய புதிய திட்டங்களை உருவாக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்துவது சிரமமாக இருக்கும்.

அடுத்துவரும் ஆண்டுகளில் புதிதாக உருவாகக்கூடிய தொழில்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு பயிற்சி தரவேண்டும்; தமிழ்நாட்டில் பிளாஸ்டிக் தொழில்களுக்குச் சிறந்த வருங்காலம் உள்ளது; வருங்காலத்தில் இவை விரிவுபெறக்கூடும்; இவற்றின் தேவைகளுக்கேற்ப இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்த பயிற்சி நிலையங்களை தொடங்குவது அவசியம்."

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் எல். எம். வாசகம் வரவேற்றுப் பேசுகையில் தொழிற் பயிற்சிக் கழகங்களின் எண்ணிக்கை அதிகமாகியிருப்பதைக் குறிப்பிட்டார்; அகில இந்தியத் தொழில் திறன் போட்டியில் சிறந்த இடம் தமிழ்நாட்டிற்கு கிடைத்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

"சென்னைப் பல்கலைக்கழகம் -- அண்ணாமலைப் பல்கலைக் கழகம் -- மதுரைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்காக தற்போது 26 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் உள்ளன" என்று அவர் தெரிவித்தார்.

வேலைவாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்யப்படுவோரின் எண்ணிக்கை சென்ற 10 ஆண்டுகளில் மூன்று மடங்குக்கு அதிகமாக அதிகரித்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்; 'வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்த எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்; தொழில்களை விரிவுபடுத்துவது இதற்கு அவசியம்' என்று அவர் கூறினார்.

"வேலைக்குப் பொருத்தமாக இருப்பவர்களை என்பதைத் தெரிந்திகொள்ளாமல் இளைஞர்களுக்கு பயிற்சி தரும் போக்கை நிறுத்துவது அவசியம்" என்று அவர் வலியுறுத்தினார்.

உடல் ஊனமடைந்தோர் உதவிக்குத் திட்டங்கள்

"தமிழ்நாட்டில் உள்ள உடல் ஊனமடைந்தவர்களின் மறுவாழ்வுக்காகத் தொழில் துறையிலும் -- விவசாயத் துறையிலும் இரண்டு திட்டங்களைத் தொடங்க உடல் ஊனமடைந்தோர்களுக்கான தமிழ்நாடு வாரியம் எண்ணியிருக்கிறது" என்றும் திரு. இராசேந்திரன் தெரிவித்தார்.

பொறியியல் பட்டதாரிகளுக்கு தொழில் நடத்த உதவி

சிறப்புத் திட்டம் வகுக்க குழு அமைப்பு

சென்னை, அக். 9—

வேலையில்லாமல் இருக்கும் பொறியியல் பட்டதாரிகள், 'டிப்ளமாதாரர்கள் ஆகியோர் -- அவர்களுக்கான மத்திய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் -- சொந்தமாக வேலை தேடி கொள்வதற்கான தனித் திட்டங்கள் வகுப்பதற்குத் தமிழக அரசு குழு ஒன்றை அமைத்திருக்கிறது.

தொழில் துறை செயலாளர் அதன் தலைவராக இருப்பார்; தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கார்ப்பரேஷன் தலைவர் -- நிர்வாக இயக்குநர் -- தொழில் வணிகத் துறை இயக்குநர் -- தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷன் நிருவாக டைரக்டர் வேலை வாய்ப்பு, பயிற்சி டைரக்டர் ஆகியோர் மெம்பர்களாக இருப்பார்கள்.

தொழில் -- வர்த்தக இணை இயக்குநர் இ. என். நாராயணசாமி கன்வீனராக இருப்பார்.

அரசாங்கத் தொழில் துறை தனியார் தொழில்துறை, தேசியமயமான பாங்குகள், சிறுதொழில் சம்மேளனம், வர்த்தக சபைகள், ஆகியவைகளுடன் மேற்கண்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டங்களைப் பற்றி கமிட்டி விவாதிக்கும்.

தங்களிடம் உடனடியாக நிறைவேற்றக்கூடிய திட்டம் வைத்திருக்கும் வேலை கிடைக்காத எஞ்சினியர்களும் -- டிப்ளமாதாரர்களும், தங்களுடைய திட்டத்தை நிறைவேற்ற அரசாங்க உதவி தேவைப்பட்டால் அவர்கள் அமைப்பாளருடன் தொடர்பு கொள்ளலாம்; இத்துறையில் நல்ல ஆலோசனைகளைக் கூறக் கூடியவர்களும் மேற்கண்டவருடன் தொடர்பு கொள்ளலாம்.

அவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய இடம், 'தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் கண்ணம்மை கட்டிடம்,— 122, அண்ணா சாலை, சென்னை-6' ஆகும்.

மக்கள் தொகை பெருகுகிறது

இந்திரா காந்தியின் 'அபாய அறிவிப்பு'

புதுடில்லி, அக். 9—

"மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகிறது; இது, நாட்டுக்கு ஆபத்தானதாகும்.

"மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினால்தான் மக்களின் வாழ்வு வளம் பெறும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மாநில முதல்வர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"நாட்டிற்குத் தேவையான மிக முக்கியமான திட்டம் -- குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமாகும்; இதைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும்; இதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களின் ஆதரவையும் பெறவேண்டும்; அப்போதுதான் இந்தத் திட்டம் வெற்றியடையும்.

"மக்களிடம் இந்தத் திட்டத்தின் நன்மைகளை விளக்கிக் கூறி -- அவர்களின் ஆதரவைப் பெற வேண்டும்."

வழுதாவூரில் அறிவியல் ஆய்வுக்கூடம்

அமைச்சர் இராமச்சந்திரன் திறந்து வைத்தார்

விழுப்புரம், அக். 9—

விழுப்புரத்தை அடுத்த கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வழுதாவூர் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில ரூ. 25,000 செலவில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டப்பட்டுள்ளது; இந்தக் கட்டடத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் திறந்துவைத்தார்.

விழாவுக்கு எம். இராமன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்,

கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் என். வெங்கடேசன், மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி கே. எஸ். சீனிவாசன் மற்றும் பலர் பேசினார்கள்.

பக்கிரிபாளையம் கிராமத்தில் மின்விளக்கு ஏற்றுவிழா

விழுப்புரம், அக். 9—

விழுப்புரத்தை அடுத்துள்ள பக்கிரிபாளையம் கிராமத்தில் மின் விளக்கேற்றுவிழா நடைபெற்றது.

கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எஸ். வெங்கடேசன் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் தெரு மின்விளக்குகளை ஏற்றி வைத்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் எம். சண்முகம், எம். இராமன் ஆகியோர் பேசினர்.

செய்தியாளரிடம் முதல்வர் பதில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'கலை விழாக்கள்' என்ற பெயரில் சூதாட்டங்கள் நடக்கிறதே?"

பதில்:— "அவற்றையெல்லாம் தடை செய்வதற்காக அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்திருக்கிறது; காவல் துறையினரும் கண்காணிப்பாக இருக்கின்றனர்; நடவடிக்கை எடுக்கப்பட்டால், அதை எதிர்த்துச் சிலர் நீதிமன்றம் செல்கிறார்கள்; சூதாட்டம் நடத்துவதற்குக்கூட சட்ட உரிமை இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்; ஆகவே, இந்தத் தீமைகளை அறவே ஒழிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று சட்டத் துறை ஆராய்ந்து வருகிறது."

ஊழல்மீது நடவடிக்கை — விவரம் சொல்வதற்கில்லை

கேள்வி:— "தமிழ்நாட்டில் ஆளும் காங்கிரசுத் தலைவர் ஒருவர்மீது ஊழல் விசாரணை இருக்கிறதே — அது எந்த அளவில் இருக்கிறது?"

பதில்:— "நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது."

கேள்வி:— "என்ன ஊழல் என்று சொல்ல முடியுமா?"

பதில்:— "நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால் விவரம் சொல்வதற்கில்லை."

அந்தக்கூட்டத்தின் முடிவு நன்கு உணர்த்தியதே!

கேள்வி:— "ஸ்தாபன காங்கிரசு நடத்திய ஊர்வலம் — மாநாட்டிற்கு அதிகக் கூட்டம் வந்ததே — இது எதிர்க் கட்சியினுடைய வளர்ச்சியைக் காட்டுவதாகத்தானே கருதப்படுகிறது?"

பதில்:— "கூட்டம் ஏன் அதிகமாக வந்தது என்பதை, அந்தக் கூட்டத்தின முடிவே நன்கு உணர்த்தியது."

அது அவர்கள் பழக்கம்

கேள்வி:— "தேசியத் திருவிழா நடந்தபோது, முத்து மன்றங்களும், பிற படிப்பகங்களும் கொளுத்தப்பட்டதே — இதற்கு மதுரை காங்கிரசு மாநாட்டில் வருத்தம் தெரிவிக்கவில்லையே?"

பதில்:— "அது அவர்கள் பழக்கம்."

தி.மு.க. செயற்குழு — பொதுக்குழு பரிசீலிக்கும்

கேள்வி:— "கழகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தலைவர் பெயரிலும் மன்றங்கள் இருக்கின்றன; அப்படியிருக்கும்போது, எம் ஜி.ஆர். மன்றங்கள் சார்பில தனியாக மாநாடு நடத்த முடிவு எடுத்திருக்கிறார்களே?"

பதில்:— "அதுபற்றி சென்னை மாவட்ட தி.மு.க.-வும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது; அதைச் செயற் குழுவும் — பொதுக்குழுவும் பரிசீலிக்கும்."

கேள்வி:— "அப்படித் தனிக் கூட்டம் நடத்துபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?"

பதில்:— "கட்சி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் செயற் குழுவிலும் — பொதுக் குழுவிலும்தான் விடை காணமுடியும்."

கேள்வி:— "கழகத் தலைவர் என்ற முறையில பதில் கூறுங்களேன்?"

பதில்:— "சொல்லலாம்; சொல்லாமல் இருப்பதும் தலைவருக்கு உள்ள உரிமை."

அவர் கூற்று — இவர் பதில்

கேள்வி:— "மனோகரன் பற்றிக் கண்ணதாசன் ஏதேதோ கூறியிருக்கிறாரே?"

பதில்:— "அதற்கு மனோகரனே பதில் கூறியிருக்கிறாரே."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

மாற்றுக் கட்சியினருக்கு இடம் தரக்கூடாது

கேள்வி:— "மாற்றுக் கட்சியில் உள்ள ஒருவர் கழகத்தில் உள்ள தலைவர்களைத் தாக்கிப் பேசி வருகிறாரே — கட்சித் தலைவர் என்ற முறையில் அதைக் கண்டிக்கிறீர்களா?"

பதில்:— "தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை மாற்றுக் கட்சிக்காரர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள்; அதற்கு இடம் கொடுக்காமல் இருப்பதுதான் கழகத்தினரின் பொறுப்பாக இருக்கவேண்டும்."

ஏதும் சொல்வதற்கில்லை

கேள்வி:— 'இராஜாஜியும் — நீங்களும் சந்தித்துப் பேசினீர்களே — என்ன பேசினீர்கள்?"

பதில்:— "சந்திப்புப் பற்றிப் பத்திரிகையில் வந்திருக்கிறது; அதுபற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை."

கேள்வி:— "உங்கள் சந்திப்பின் எதிரொலியாகத் தி. மு. கழகத்திற்கும் — சுதந்தராவுக்கும் உறவு மீண்டும் ஏற்படுமா?"

பதில்:— "அப்படி ஒரு நட்சத்திரம் தோன்றவில்லை."

இப்போது பதில் கூறத் தேவையில்லை

கேள்வி:— "தமிழ்நாட்டில் உள்ள வானொலியில் தமிழ்நாட்டின் கலை — கலாச்சாரம் பற்றி அதிகம் ஒலிபரப்பப்படுவது இல்லையே?"

பதில்:— "பொதுவாக வானொலி நிகழ்ச்சிகள் எப்படி இருக்க வேண்டும் என்று நாங்கள் கோரி வரும் மாநில சுயாட்சிக் கோரிக்கையில் வலியுறுத்தி வருகிறோம்; அதனால், இப்போது இந்தக் கேள்விக்குப் பதில் தேவையில்லை."

வேறு யாராவது சொல்லியிருக்கலாம்

கேள்வி:— "என். ஜி. ஓ.-வினர், 'ஒரு நபர் குழு முடிவு சரியாக இல்லை' என்று கருத்துத் தெரிவிக்கிறார்களே?"

பதில்:— "என். ஜி. ஓ.-வினர் சங்கத்திலிருந்து யாரும் சொன்னதாகத் தெரியவில்லை; என். ஜி. ஓ. என்ற பெயரில் வேறு யாராவது சொல்லியிருக்கலாம்."

கோரிக்கை வந்தால் கவனிக்க இயலும்

கேள்வி:— "பாலிடெக்னிக்குகள் மூடப்பட்டிருக்கிறதே? மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டுமென்றும், நேரடியாக பி. இ. தேர்வு கோரியும் கோரிக்கை விடுத்திருக்கிறார்களே?"

பதில்:— "நிறைவேற்றக் கூடிய கோரிக்கைகள் வந்தால் அரசினால் கவனிக்க முடியும்."

பாலங்களுக்குப் பெயரிடுதல்

கேள்வி:— "இன்று நீங்கள் திறக்கும் பாலத்துக்கு, 'மேயர் முத்து பாலம்' என்று பெயர் வைக்கப்பட்டிருந்ததே — இப்போது மாற்றப்பட்டிருக்கிறதே — ஏன்?"

பதில்:— "மாநகராட்சி தீர்மானம் போட்ட பிறகு, 'முத்துராமலிங்கத் தேவர் பாலம் என்ற பெயர் தேவை' என்று சிலர் தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள்; மதுரையில் கட்டப்படும் இன்னொரு மேம்பாலம் ஒன்றுக்கு 'முத்து பாலம்' என்றும், மற்றொன்றுக்கு 'முத்துராமலிங்கத் தேவர்' பாலம் என்றும் பெயர் வைக்க முடிவு செய்திருப்பதால், இப்போது தன் பெயரால் பாலம் திறக்கப்பட வேண்டாம் என்று முத்து அவர்களே கூறினார்; அதை நானும் ஒப்புக் கொண்டேன்."

சென்னை, அக். 9—

அக்டோபர் திங்களில் நடைபெறும் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை, அக். 23 முதல் தொடங்கி அக். 27-ம் நாள் வரையில் நடைபெறும்.

நடக்க இருப்பவை

அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள்

10-10-72

திருவரங்கம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு சாத்தார வீதியில்; தலைவர்: எஸ். எம். வி. சாமி எம்.சி., பேசுவோர்: அமைச்சர் மு. கண்ணப்பன், எம். எஸ். வெங்கடாசலம் (திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர்), சி. தமிழரசி, ஜி. பராங்குசம் எம்.எல்.சி., வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம், மு. நடராசன், சி. கன்னையன், வெ. நடேசன், வ. இராமையா, கோ. இராமு, ஆர். காமாட்சியம்மாள், நா. தமிழ்முத்து, ஆ. பொன்னுசாமி எம்.சி., கு. காமாட்சி எம்.எல்.ஏ. எம். எஸ். மணி, எஸ். ஏ. ஜி. ராபி, டி. என். வையாளி, க. இராசவேலு, நா. இராசரத்தினம், தா. செவந்திலிங்கம் எம்.சி., எஸ். சுப்பையா, ஆர். கந்தசாமி, மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் — உட்கிளை செயலாளர்கள்.

திருவெண்ணெய்நல்லூர்

வட்டார தி.மு.க.—எம் ஜி.ஆர். மன்றங்கள் சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணா சிலை அருகில்; தலைவர்: தி. மு. மாண்டுரங்கன்; வரவேற்புரை: தி. வ. அண்ணாதாசன்; பேசுவோர்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி., எம். செல்வராசு எம்.எல்.ஏ., வீ. சுப்பிரமணியன் எம்.எல்.ஏ., அ. சே. குமாரசாமி எம்.எல்.ஏ., என். இராமச்சந்திரன், த. மாசிலாமணி, டி. என். ஜி. ஏ. மோகன், அ. சுப்பராயலு, கவிஞர் கு. சீத்தா, இரா. வரதராசன், ஜே. கண்ணன், மு. சீனுவாசன், ம. இராமநாதன், சு. மாதவன், தி. கு. திருஞானம், ஆர். மாரிமுத்து, ந. மருதப்பன், தி. மு. நாவளவன், சு. சனநாயகம்.

பிற்பகல் 2 மணியளவில். காந்தி உயர்நிலைப் பள்ளித் திடலிலிருந்து வெ. நரசிங்கம் தலைமையில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்புடன் அண்ணா திருவுருவப் படம் ஊர்வலம் புறப்படும்; வார்டுகள்தோறும் கழகத் தோழர்கள் கொடியேற்றுவர்.

மாலை 5 மணிக்கு திருவெண்ணெய்நல்லூர் கடை வீதியில் அ. சே. குமாரசாமி எம்.எல்.ஏ. தலைமையில் — எம். செல்வராஜ் எம்.எல்.ஏ., வீ. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் பேரறிஞர் அண்ணா சிலையை இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி. திறந்து வைப்பார்.

சென்னை 106-வது வட்ட தி.மு.க. கிளை — தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை 106-வது வட்டம்—இராஜாஜி நகர் தி.மு.க. கிளையின் நிர்வாகக் குழு — செயற்குழு — மேலமைப்புப் பிரதிநிதிகள் ஆகிய பொறுப்புக்களுக்காக ஏற்கனவே நடைபெற்ற தேர்தலில் ஏற்பட்ட குறைபாடுகளைத் தலைமைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் — தற்போது அந்தக் கிளை செயல்படாமலே இருக்கும் சூழ்நிலையை எடுத்துக்காட்டியும் — வட்டத்தில் கழகத் தோழர்களுக்குள் ஏற்பட்டுள்ள தகராறுகளை விளக்கியும் சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தலைமைக் கழகத்திற்கு அளித்துள்ள பரிந்துரைக்கு ஏற்ப, சென்னை 106-வது வட்ட தி.மு.க. கிளையின் நிர்வாகக் குழு — செயற்குழு ஆகியவை இன்றுமுதல் கலைக்கப்படுகின்றன; அத்துடன், அந்தக் கிளையிலிருந்து மேலமைப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தேர்தலும் இதன்மூலம் ரத்து செய்யப்படுகிறது.

சென்னை 106-வது வட்ட தி.மு.க. கிளையின் தகுதி வாய்ந்த உறுப்பினர்களால் முறைப்படி கிளையின் நிர்வாகக் குழு — செயற்குழு ஆகியவையும், மேலமைப்புப் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்படும் வரையில், அந்தக் கிளையின் நிர்வாகப் பொறுப்புக்களைச் சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளரின் மேற்பார்வையில் பகுதி தி.மு.க. செயலாளர் நிறைவேற்றி வருவார்.

'அறிவகம்'
சென்னை-13
7-10-1972

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி.மு.க.

கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள்

திட்டத்திற்குத் தமிழக அரசு ரூ. 6 கோடி ஒதுக்கியிருக்கிறது

அமைச்சர் சாதிக் பாட்சா தரும் தகவல்

மதுராந்தகம் அக். 9—

"தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் வசதி 1976-ம் ஆண்டுக்குள் முடிவு பெற்றுவிடும்.

"இந்த இணைப்புச் சாலைத் திட்டத்துக்காக அரசாங்கம் இவ்வாண்டில் ரூ. 6 கோடி ஒதுக்கியிருக்கிறது; 1,500-க்கு மேல் மக்கள் தொகை உள்ள கிராமத்துக்கும் இவ்வாண்டு இந்த இணைப்புச்சாலைத் திட்டம் மேற்கொள்ளப்படும்"

என்று, அமைச்சர் எஸ் ஜே. சாதிக் பாட்சா அவர்கள், திருவள்ளூர் நகராட்சி அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், தங்களால் ஆனவற்றை மக்களுக்குச் செய்ய வேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நகராட்சித் தலைவர் திரு செல்வராசன வரவேற்பிதழைப் படித்து அளிக்கையில், 'திருவள்ளூர் நகராட்சிக்கு அரசாங்கம் குடிநீர் வசதிக்காகக் கடனாக அளித்த ரூ. 17 இலட்சத்தை மானியமாகத் தர வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

மதுரை மாநாட்டுச் செயல் வீரர்கட்குப் பாராட்டு

முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பங்கேற்பு

மதுரை, அக். 9—

அண்மையில் நடைபெற்ற மதுரை மாவட்ட தி. மு. கழக ஐந்தாவது மாநாட்டுப் பணிகளில் அயராது உழைத்த கழகத் தோழர்களுக்கு நேற்று ஒரு பாராட்டு விருந்து அளிக்கப்பட்டது.

கழகத் தலைவர் கலைஞர் தலைமை வகித்தார்.

கழகத் தோழர்களைப் பாராட்டி அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், ஓ. பி. இராமன், முதியவர் வி. வி. இராமசாமி, எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி. ஆகியோர் உரையாற்றினர்.

கலைஞருக்கு முதியவர் வி. வி. ஆர். பொன்னாடை அணிவித்தார்.

மதுரை மாவட்டச் செயலாளர் முத்து எம் எல்.சி. அவர்களுக்குக் கலைஞர் பொன்னாடை அணிவித்தார்.

பின்னர் கழகத் தோழர்களைப் பாராட்டி கலைஞர் உரையாற்றினர்.

வேலைவாய்ப்பு திட்டம்

ரூ. 201 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்ய சிபாரிசு

புதுடில்லி, அக். 9—

"1973—74-ல், வேலைவாய்ப்புத் திட்டங்களுக்காக ரூ. 201 கோடி கூடுதலாக ஒதுக்க வேண்டும்" என்று திட்டக் குழுவின் செயற் குழு ஒன்று சிபாரிசு செய்திருக்கிறது.

மின்விசையால் இயங்கும் ஸ்கூட்டர் கண்டுபிடிப்பு

புதுடில்லி, அக். 9—

மின்சார விசையால் இயங்கும் உலகின் முதல மோட்டார் ஸ்கூட்டரை மேற்கு ஜெர்மனி கண்டுபிடித்திருக்கிறது; மணிக்கு 25 கிலோ மீட்டர் செல்லும்.

மின்சாரத்தால் இயங்குவதால், அது, புகையை வெளிப்படுத்திச் சூழ்நிலையைக் கெடுப்பதில்லை.

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட புகார்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக மாஜிஸ்திரேட் கூறினர்.

மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலாளர் சிவராம் யாதவ், நிர்வாகம் — குறிப்பாகப் போலீசுத் துறை நடவடிக்கை எடுக்கத் தவறியதாகக் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

மதுரையில் மாபெரும் பொதுக் கூட்டம்

கொட்டும் மழையில் கலைஞர் பேச்சு — 50,000 பேர் கூடிநின்று கேட்டனர்

சென்னை, அக். 8—

இன்று மதுரையில் மேல மாசி வீதியில் மாபெரும் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாலை 7 மணி முதல் இரவு 9 மணி வரையில் பெய்த பெருமழை நின்றதும் 50,000 மக்கள் கூடினர்.

கூட்டத்திற்கு மதுரை மேயர் முத்து தலைமை வகித்தார்.

கழகத் தலைவர் கலைஞர், அமைச்சர் ஓ. பி. இராமன், திருச்சி மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம், முகவை மாவட்டச் செயலாளர் எஸ். எஸ் தென்னரசு, தா. கிருஷ்ணன் எம்.பி., இராசாங்கம் எம்.பி., காவேரி மணியம் எம்.எல்.ஏ., கு. திருப்பதி எம். எல். ஏ., திருவை அண்ணாமலை மற்றும் மதுரை மாவட்ட எம.எல்.ஏ.-க்கள் பேசினர்.

விருதை ஜெயராஜ் நிகழ்ச்சிகள்

அக். 15: திண்டுக்கல்; 16: கரூர்; 17: சேலம்: 19: புதூர்; 20: கன்னிராஜபுரம்.